Koviloor Digital Library

உ

சிவமயம்

கோட்டையிருப்பு
ஓம் சூர மாகாளி அம்மன் பதிகம்

சிந்தனைக் கவிஞர் சித. சிதம்பரத்தின்
தொலை நோக்குப் பார்வையில் ...

பாவாக்கம்: கவிஞர் சித. சிதம்பரம்

வெளியீடு:
அ. வீர. சந்திரன் யாதவர்
கோட்டையிருப்பு.
திருப்பத்தூர் வட்டம்.
சிவகங்கை மாவட்டம்.

ACCNo. 32198
Q25 3-3

Koviloor Digital Library

உ
சிவமயம்

பேழையொடு வெள்ளிப் பிரம்போடு வந்தாய் !
பெண்ணரசி ஓம்சூர மாகாளி ஆனாய் !
வாழவந்த தலைக்கட்டு ஆறுக்கும் மேவி
வளமோடு வழிவழியாய் வாழ்த்துகிற தேவி !
சூலமொடு அரிவாளும் திருநீற்றுப் பையும்
தீபக்கால் ஏந்திநீ தேடியே வந்தாய் !
காலமெலாம் காக்கின்ற காளியம்மை நீயே !
காப்பென்று வேண்டினோம் காத்தருளு வாயே ! -1

கோடாங்கிக் குறியோடு குடியமர்த்தி விட்டோம் !
குலங்காத்து நலங்காக்கும் விடிவெள்ளி கண்டோம் !
ஆடோடு மாடுநிலம் ஆயர்க்குத் தந்தே
ஆயிரமாய்ச் செல்வமதைக் கூடவே தந்தாய் !
கோடையிலே குளிரினில் குவலயங்கள் திக்கில்
கோட்டையதன் இருப்பிலே கோலோச்சி நின்றாய் !
தேடரிய செல்வமே ! ஓம் சூர காளி !
தெய்வமே நின்பாதம் சரணமே வாழி ! -2

பிள்ளையார் அய்யனார் பேசிடும் நாச்சி
பேரழகி நீஉள்ள ஊரினில் ஆட்சி
அள்ளுகிற கருணையால் ஆண்டாண்டு தோறும்
அடியவர்கள் செய்கின்ற பூசையினில் வாழும்
தெள்ளமுதத் தெய்வமே ! திரிசூலி ! காளி !
திசையெட்டும் முழங்கிடும் இசைகொண்டு சூடி
உள்ளத்தை உனக்கென்றே ஆக்கினோம் கோயில்
ஓம் சூர ஓங்கார காளியே ! வா இல் ! -3

நாரையே பறக்காத நாற்பத்தெட் டேந்தல்
நாட்டிற்குள் பாய்கின்ற பாலாற்றின் தேன்கள்
பாரையே புரக்கின்ற பைந்தமிழர் தெய்வம்
பக்திக்கு வைகாசி செவ்வாயில் செய்வோம்
ஊரையே வளம்செய்து உயர்வாக்க வேண்டும்
உன்குடிகள் எல்லோரும் சிறப்பாக்க வேண்டும்
தேரேறி வருகின்ற ஓம்சூர காளி !
தெய்வமே ! எந்நாளும் காப்பாற்றி வாழி ! -4

KOVILOOR LIBRARY
32178

Koviloor Digital Library

காலத்தின் சக்கரத்தை உருட்டுபவள் நீயே !
கட்டாயம் சத்தியத்தைப் புரப்பவளும் நீயே !
மூலத்தின் வேருக்கும் மூலவளும் நீயே !
முக்கண்ணர், திருமாலும், பிரம்மாவும் நீயே !
ஞாலத்தின் பெருந்தெய்வம் காளியம்மை நீயே !
யாம்வணங்கும் எமைப்பணிக்கும் ஆதிசக்தி நீயே !
கோலமுடன் திரிசூலம் பேருருவம் நீயே !
கோட்டையதன் இருப்பான கோமகளே தாயே ! -5

ஐந்துகரை சேர்கின்ற யாதவர்கள் சேர்ந்து
ஆனமுதற் கரையான கருப்பர்கரை சூழ்ந்து
பிஞ்சுமுதல் மூப்புவரை வழிகேட்டுப் போற்ற
பெருந்தெய்வம் அருந்தெய்வம் நறுந்தெய்வம் காப்பு !
மஞ்சனொடு மைந்தர்களும் மாதர்களும் காக்கும்
மஞ்சுலவு கூந்தலுடை செஞ்சீரே ! ஆத்தா !
தஞ்சமென்று மாமாங்கம் ஒருமுறை யாம் கூடி
தாயுனக்குப் புரவியினை எடுப்போமே ! தேவி ! -6

இனம்கூடி வாழ்த்தினும் இனமில்லை உன்முன்
எல்லோருக்கும் நீபெற்ற இளம்பிள்ளை கண்முன் !
மனம்கோடி ! ஒருணர்வு ! மாதாவே அங்கு
மங்கலமே நீமுழங்கு வலம்புரியின் சங்கு !
தனம்தேடும் எங்கட்குத் தனம்தந்து காப்பாய் !
தரம்கூடி எங்களையும் நலமீந்து பார்ப்பாய்
முனமுந்தன் தாளன்றோ எம்வழியைக் காட்டும்
முக்கண்ணி ! உன்பார்வை தப்பாத தீர்ப்பு ! -7

அந்தரமாம் நாச்சியே ! ஆதிகருப் பன் வா !
ஆயிரம் கண்ணுடை நீதிநெருப் பாய்வா !
சந்ததமும் முழங்குகிற சலங்கையில் வா !
சங்கடம் என்றுமனம் கலங்கையில் வா !
மந்திரத்தின் ஒலிகேட்டு மாதாவே வா !
மண்ணுலகம் சேமமுற வேதாவே வா !
எந்திரங்கள் நாங்கள் ! இயக்குபவள் நீயே !
இமயீ பகவதி குமரியே ! தாயே !

Koviloor Digital Library

கைவீசிக் கைவீசி நடக்கின்ற பிள்ளை
கடல்வானம் மலைபூமி ஆள்கின்ற நல்லை
உய்வுலகம் அத்தனைக்கும் உற்பத்தி எல்லை
ஒய்யாரி சிங்காரி அலங்காரி முல்லை
செய்கையும் செய்வதும் செயப்பாடு மானாய் !
செங்கரும்பு வில்லோடு சிங்கமேறு கின்றாய் !
வைகாசிப் பொங்கலிலே பாலாக வந்தாய்
வயிறார மனசார எமைஆளு கின்றாய் !

பூசையுடன் பொங்கலிட்டோம் பூமகளைத் தேடி
புதுப்பொலிவு குடமுழுக்கில் தாயுனையே நாடி
தேசுபுகழ் கார்த்திகை வெள்ளியொடு திங்கள்
சிவன்ராத் திரிக்கும் உறங்காத கண்கள்
வாசமுள்ள மலரோடு வணங்குகிற போது
வாரிசுகள் தொழுதுவரும் வாழ்க்கையிது பேறு !
ஆசிசொலி நீதிசொலி ஆக்குவாய் காளி !
அழகுமிகு கோட்டை இருப்பாளே வாழி !

வெண்பா

கோட்டை இருப்பான கோமகளாம் காளிமேல்
பாட்டைத் தினம்தோறும் பாரா யணம்செய்வோர்
பேற்றைப் பதினாறாய்ப் பெற்றுச் சிறந்தவராய்
வீற்றே இருப்பார் விளைந்து !.

கவிஞர் **சித. சிதம்பரம்**
ப. மு. சித. வீடு,
பழநியப்ப விலாசம்,
முதல்வீதி
முத்துப்பட்டணம்,
காரைக்குடி-630 001.
தொலைபேசி 04565-250749

மெய்யப்பன் ஆப்செட் பிரிண்டர்ஸ், காரைக்குடி. போன்234093